தமிழியக்க வெளியீடு 46

# ஒன்பான்கோள் வணக்கப் பாடல்கள்

இயற்றியோர்:

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்

பதிப்பாசிரியர்:

முனைவர் அ. சிவபெருமான்

தமிழியக்க வெளியீடு

# ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள்

இயற்றியோர்

**திரு. அடிகளாசிரியர்**

ஒய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்

குகையூர் – 606 306·

பதிப்பாசிரியர்

**முனைவர் அ. சிவபெருமான்**

4–சி, வெள்ளிவிழாச் சாலை

செயங்கொண்டம் – அஞ்சல்

பெரம்பலூர் மாவட்டம் – 621 802

பதிப்பு : முதற் பதிப்பு சனவரி 1999

படிகள் : 1000

விலை : 3–00

வெளியீடு : திருவருள் நிலைய வெளியீட்டகம்
குகையூர் – அஞ்சல்
நயினார் பாளையம் – வழி
கல்லக்குறிச்சி – வட்டம்
விழுப்புரம் மாவட்டம் – 606 306

அச்சகம் : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
சிதம்பரம்

# பதிப்புரை

தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும்செய்வோம் நல்ல தொண்டு.

— பாரதிதாசன்

தமிழுக்காக,
தமிழக அரசிற்காக
தமிழக அரசின்
ஓர் அங்கமாகத் திகழும்
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு
இந்து சமயம் மற்றும் அறநிலையத்
துறையின் அமைச்சகத்திற்காக
"ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள்"
எனும் நூலைப் பதிப்பித்து வழங்குகின்றேன்.

துறைதோறும் தமிழியக்கம் வளர வேண்டும்; எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலை உருவாக வேண்டும்.

வெகுதான்ய / தை 16
(30—1—99)

இங்ஙன்
**அ. சிவபெருமான்**

## நூல் வெளியீட நிதி ...

தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சித் துறை** 1997–ஆம் ஆண்டு வெளியிடப் பெற்ற சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் எனும் தலைப்பில் போட்டிக்கு வரப் பெற்ற நூல்களுள், யான் எழுதிய, '**இலக்கியங்களில் வானியல்**'' என்னும் நூலை முதல் பரிசுக்காகத் தேர்ந் தெடுத்துப் பரிசுத் தொகையாக உருபாய் பத்தாயிரத்தையும் சான்றிதழையும் வழங்கியது. அப்பரிசுத் தொகையைத் தமிழக முதல்வர் **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் திருவள்ளுவர் விழாநாளில் (16—1—99) வழங்கிச் சிறப்பித்தார். மேற் குறிப்பிட்ட பரிசுத் தொகையில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி **ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள்** என்னும் இந்நூலை அச்சிட்டு வழங்கியுள்ளேன்.

வெகுதான்ய / தை 16
30—1—99

**அ. சிவபெருமான்**

# முன்னுரை

நம்பியாண்டார் நம்பிகள் திருஞானசம்பந்தரை, **"ஆற தேறும் சடையானாகிய"** சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு **"வீறது ஏறும் தமிழால்"** [சண்பை விருத்தம்] வழிகண்டவர் என்று சிறப்பித்தோதுவார். திருஞான சம்பந்தர் செந்தமிழ் நாட்டுச் சீர்காழியில் அந்தணர் குலத்தில் கவுணியர் கோத்திரத்தில் பிறந்தவர் என்பதை அறிஞர் உணர்ந்து கொள்ள வேண்டும். இச்சிறந்த அந்தணர் குலத்தில் பிறந்த திருஞானசம்பந்தருக்கு உள்ள தமிழ்ப்பற்றை இக்காலத்து அந்தணர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அன்றியே, அப்பரடிகள் தம்முடைய கடவுள் வழிபாட்டுக் காலத்தில் தமிழ்ப் பாட்டுக்களையே பாடி வந்தார் என்பதை,

**"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"**

என்னும் பகுதியுள் உணர்ந்து கொள்ளலாம்.

பிற்காலத்தில் வாழ்ந்த துறைமங்கலம் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் தம்முடைய கடவுள் வழிபாட்டில் பயன்படுத்திக் கொள்வதற்காக, இட்டலிங்க அபிடேக மாலை, குறுங்கழிநெடில், பெருங்கழி நெடில், நிரஞ்சன மாலை என்பவற்றை இயற்றி அவற்றைப் பயன்படுத்தியும் வந்தார் என்பதை அறிஞருலகம் நன்கறியும். இன்றும் வீரசைவப் பெருமக்கள் அப்பாடல்களைத் தம் கடவுள் வழிபாட்டுக் காலத்தில் ஓதி வருகின்றனர்.

என் இளமைக் காலத்தில் பலருக்குத் தமிழ் மந்திரங் களினாலே திருமணத்தை நடத்தி வந்துள்ளேன். அத்திருமண நிகழ்ச்சியைத் தமிழில் நிகழ்த்துவதற்காகப் பல பாடல்களை நானே இயற்றி அத்திருமணங்களை நடத்தி யுள்ளேன். தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் தமிழைக் கொண்டுவர நாமனைவரும்முயற்சிக்க வேண்டும்,

அம்முயற்சிக்குத் தூண்டுகோலாக அமைய இச் சிறுநூலை இயற்றியுள்ளேன். இதிலுள்ள பாக்களைப் பல்லோரும் பாடிப் பயன்படுத்த வேண்டும்.

**என் வேண்டுகோள்**

கோவை சிரவணபுரம் கௌமார மடாலயம் **தவத்திரு சுந்தர சுவாமிகள்** அவர்கள் தமிழாலேயே திருக்கோவில்களில் குடமுழுக்குச் செய்த பெருமையர். இவரோடு இணைந்து பேரூர் ஆதீனம் **தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்** அவர்களும், **தவத்திரு மருதாசல அடிகளார்** அவர்களும் தமிழாலேயே குடமுழுக்குச் செய்து வருகிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள ஏனைய திருமடத் தலைவர்களும் தமிழ்ப் பற்றுடையவர்களாய் ஆகவேண்டும்.

தமிழ்மீது ஆழ்ந்த பற்று வைத்துள்ள தமிழறிஞர்கள் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களுடைய திருமணம் முதலான பல நிகழ்ச்சிகளைத் தமிழால் எவ்வாறு நிகழ்த்த வேண்டுமென முறைவகுத்து உதவினால் நன்றாய் இருக்குமென யான் எண்ணுகின்றேன்.

**நூல் அச்சிடும் முயற்சி**

வழக்கம் போல் என்னுடைய நூல்களை மிக ஆர்வமாக அச்சிட்டு வழங்கும் என் இளையமகன் **அ. சிவபெருமானின்** முழு உதவியால்தான் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் அச்சுவாகனமேற உதவியதோடன்றி அச்சிடும் செலவையும் அவரே ஏற்றுக் கொண்டார். எனவே, நூல் வெளிவர அடிப்படைக் கர்த்தாவாக அமைந்த என் மகன் **அ. சிவபெருமானும்**, இந்நூலைப் படித்துப் பயன்படுத்துவோரும் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றேன். வழக்கம் போல் என்னுடைய நூல்களை மெய்ப்புத்திருத்தி வழங்கும் புலவர் **இரா. கணபதி** அவர்கட்கு நன்றி.

ஒன்பான் கோள்களும் உங்கட்கு உதவட்டும்.

இங்ஙன்

30—1—99 **திரு. அடிகளாசிரியர்**

# கோள்களின் பொது வணக்கம்

உலகெலாம் உவக்கும் ஞாயிறும் மதியும்
உயர்நில மகனும்நற் புதனும்
இலகுநற் பொன்னும் வெள்ளியும் சனியும்
இராகுவும் கேதுவும் என்னும்
அலகறு புகழ்சால் கோள்களே! நீயிர்
அனைவரும் இங்கெழுந் தருளி
குலவிடு பொருளும் இன்பமும் அறமும்
கொடுத்திட வணங்கிவாழ்த் துவமே.

# ஞாயிறு

செங்கிறம் பெற்றுச் செம்மலர் சூடி
செங்கிற ஆடை சிறக்க அணிந்தே
செஞ்சந் தனத்தொடு செவ்வணி புனைந்தே
செங்கொடி விளங்கச் செந்தேர் ஏறி
செவ்வொளி வீசும் செங்கதிர்ச் செல்வா!
நடுவண் விளங்கி நன்மலர் சூடி
நானிலம் தனக்கு நல்லருள் புரிக.

# திங்கள்

வெண்ணிறம் விளங்க வெண்மலர் சூடி
வெண்ணிற ஆடை விரும்பி அணிந்து
வெண்சந் தனத்தொடு வெள்ளணி புனைந்து
வெண்கொடி விளங்க வெண்தேர் ஏறி
வெள்ளொளி வீசும் வெண்மதி அண்ணாய்!
தென்கீழ்த் திசையுள் திகழ விளங்கி
நன்பூச் சூடி நல்லருள் புரிக.

# செவ்வாய்

செங்நிறம் பெற்றுச் செம்மலர் சூடி
செங்நிற ஆடை சிறக்க அணிங்தே
செஞ்சங் தனத்தொடு செவ்வணி புனைந்து
செங்கொடி விளங்கச் செங்தேர் ஊர்ந்து
செவ்வொளி வீசும் சேய்எனும் செம்மால்!
தென்திசை அதனில் திகழ விளங்கி
நன்பூச் சூடி நல்லருள் புரிக.

# மால் (புதன்)

பச்சை நிறத்தொடு பைம்பூச் சூடி
பச்சை ஆடை பாங்குற அணிந்தே
பச்சைக் கலவையும் பைம்பொனும் புனைந்து
பச்சைக் கொடியுடன் பைந்தேர் ஏறி
பச்சொளி வீசும் பச்சைமால்! வருக.
வடகீழ்த் திசையின் வாலிதின் விளங்கி
நெடுமலர் சூடி நின்றருள் புரிக.

# பொன் (வியாழன்)

பொன்னிறம் பெற்றுப் பொன்மலர் சூடிப்
பொன்னிற ஆடை பொருந்த அணிந்தே
பொற்சங் தனத்தொடு பொன்னணி புனைந்து
பொற்கொடி விளங்கப் பொன்தேர் ஏறிப்
பொன்னொளி வீசும் பொன்எனும் தலைவ!
வடதிசை அதனில் வளம்பெற விளங்கித்
தடமலர் சூடித் தண்ணருள் புரிக.

# வெள்ளி (சுக்கிரன்)

வெண்ணிறம் பெற்று வெண்மலர் சூடி
வெண்ணிற ஆடை விளங்க அணிந்தே
வெண்சந் தனத்தொடு வெள்ளணி புனைந்து
வெண்கொடி விளங்க வெண்தேர் ஏறி
வெள்ளொளி வீசும் வெள்ளியந் தலைவ!
கீழ்த்திசை அதனில் கிளர்ந்து விளங்கிக்
கேழ்மலர் சூடிக் கிளர்ந்தருள் புரிக.

# காரி (சனி)

கருநிறம் விளங்கக் கருமலர் சூடிக்
கருநிற ஆடை கைவர அணிந்தே
கருஞ்சந் தனத்தொடு காரணி புனைந்தே
கருங்கொடி விளங்கக் கருந்தேர் ஏறிக்
காரொளி வீசும் காரியங் கடவுள்!
மேற்றிசை அதனில் மிளிர்ந்து மணந்தரும்
காற்பெரு மலரும் சூடி
ஏற்றிட எங்கட்கு இனிதருள் புரிக.

# கரும்பாம்பு (இராகு)

புகைநிறம் பெற்றுப் புகைமலர் சூடிப்
புகைநிற ஆடை பொருந்த அணிந்தே
புகைசந் தனத்தொடு புகைநிறக் கலனும்
புகைக்கொடி விளங்கப் புகைத்தேர் ஏறி
புகையொளி வீசும் புகைபாம்பு அரசே!
தென்மேல் திசையில் திகழ விளங்கி
நன்மா மலரைச் சூடி
இன்னருள் புரிந்து எங்கட்கு அருள்க.

# செம்பாம்பு (கேது)

கருப்பும் மஞ்சளும் கலந்த நிறத்தொடு
கலவை மலரும் கலவை ஆடையும்
கலவைக் குழம்பும் கலவை அணியும்
கலவைக் கொடியும் கலவைத் தேரும்
கலவை ஒளியும் கவின்வர விளங்கிச்
சிறந்து விளங்கும் செம்பாம்பு அரசே!
வடமேல் திசையில் வகைபெற விளங்கி
நெடுமலர் சூடி நின்றருள் புரிக.

தமிழியக்க வெளியீடு

# ஒன்பான்கோள் வணக்கப் பாடல்கள்

(பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்)

- தமிழ்நாட்டு அரசியலிலும், தமிழ்நாட்டுத் திருக் கோயில்களிலும் தமிழ் மொழியே தலைமை பெறல் வேண்டும்.

- தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழ்த் திரு முறைகளால் வழிபாடு செய்தலே தக்கதாம்.

- தமிழ்நாட்டில் சைவ வைணவத் திருக்கோயில் தவிர ஏனைய கோயில்களில் இன்றும் தமிழி லேயே வழிபாடு நடைபெறுகின்றது என்பது கருதத்தக்கது.

— திரு. அடிகளாசிரியர்

சபாநாயகம், சிதம்பரம்